# சன நெரிசலில் பதினைந்து பேர் பலி!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி இலக்கம் 49
போன் 220

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 204

[illegible] ஆவணி 18 றஜப் 12 வெள்ளிக்கிழமை (3-9-71)

## தமிழ்நாட்டில் 4 பேர் உதயபூரில் 10 பேர்

சென்னை, செப் 2

இந்தியாவில் சன நெரிசலில் இன்று 14 பேர் பலியானார்கள். தமிழ்நாட்டிலும் ராஜஸ்தான் ராஜ்யத்திலும் இத் துயரச்சம்பவம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு அருகே சுவாமிமலையில் சனநெரிசலில் மூச்சுத்திணறி 4 பேர் மாண்டார்கள்.

கும்பகோணத்துக்கு சமீபத்திலுள்ள சுவாமிமலைத் திருவிழாவில் கலந்துகொண்டவர்கள் விழாவை நன்றாகப் பார்ப்பதற்கு விழுந்தடித்துக் கொண்டு காவிரி ஆற்றுப் பாலத்துக்கு ஓடியபோது, 4 பேர் மூச்சுத்திணறி மாண்டனர்.

ராஜஸ்தான் ராஜ்யத்திலுள்ள உதயப்பூரில் சனநெரிசல் ஒன்றில், சுமார் 10 பேர் மரணமானார்கள்.

'ஸ்கூட்டர்' வாகனங்களை வாங்குவதற்கு பெயர் பதிவதற்காக கூடியிருந்த சனங்கள் நெரிசல்பட்டதால்

[5-ம் பக்கம் பார்க்க]

# திடீர்பதுக்கல் வேட்டையில் ரூ. 125 லட்சம் பொருட்கள்!

## இலங்கையரல்லாதவரின் 12 கடைகளுக்கு 'சீல்'!!

கோட்டை, வியாழன்

கொழும்பில் நேற்றும் இன்றும் நடாத்தப்பட்ட திடீர் பதுக்கல்வேட்டையில் இலங்கையரல்லாதவர்களுக்குச் சொந்தமான வர்த்தக ஸ்தாபனங்களில் இருந்து 125 லட்சம் ரூபாய் பொருட்கள் சிக்கின

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட திடீர் பதுக்கல் 'வேட்டையில்' சுமார் 75 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நேற்று 50 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் பதுக்கிவைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையரல்லாதவர்களுக்குச் சொந்தமான கடைகளிலேயே இந்தப் பெரும் பதுக்கல் வேட்டை நடாத்தப்பட்டது.

இலங்கையரல்லாத வர்த்தகர்களுக்குச் சொந்தமான பன்னிரண்டு கடைகள் இன்று சீல் வைத்து மூடப்பட்டன.

கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபன திடீர் பரிசோதனைக்குழு நேற்றும் இன்றும் இந்த திடீர் பதுக்கல் வேட்டையை கொழும்பில் நடாத்தியது.

பெற்றோமாக்ஸ் விளக்குகள் அடியின் விளக்குகள் மான்டில்கள் பம்புகள் போன்றவை பெருமளவில் பதுக்கல் வேட்டையின் போது சிக்கின.

1966-ம் 1967-ம் ஆண்டு லைசென்ஸ்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு இதுவரைகாலமும் பதுக்கி வைத்து, கொள்ளை லாப விலையில் விற்பனைசெய்ய முயன்ற மோசடி, திடீர் பரிசோதனைக் குழுவின் திடீர் வேட்டையில் அம்பலத்துக்கு வந்தது.

கொழும்பு டாம்வீதி, புறக்கோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள இலங்கையரல்லாதவர்களுக்குச் சொந்தமான பன்னிரண்டு கடைகள் பதுக்கிவைத்து, பற்றாக்குறையை ஏற்படுத்தி கொள்ளைலாபமடிக்க முயன்றதாக 'சீல்' வைக்கப்பட்டு மூடப்பட்டன.

யாழ்ப்பாணத்திலும் இன்று பல வர்த்தக ஸ்தாபனங்களில் திடீர் பரிசோதனைகள் நடைபெற்றது.

## 'மக்கள் குழு' மக்களின் தேவைகளை நிறைவேற்றும்

### ஆணையாளர் கருத்து

கோட்டை, [illegible]

மக்கள் குழுக்களே மக்களின் பாதுகாவலனாக விளங்கப் போகின்றனவென்று ஜனதா கமிட்டி ஆணையாளர் திரு. லயனல் பெர்னாண்டோ கூறினார்.

மக்கள் குழு மத்திய நிலையத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய திரு. லயனல் பெர்னாண்டோ சகல அரசாங்க இலாகாக்களினதும் வேலைகளை ஜனதா கமிட்டிகள் ஆராயமுடியும் என்றும் அதன் மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் ஆட்சி மன்றக் காரியதரிசி திரு. நீல் டி அல்விஸ் பேசுகையில், பொதுத் தேர்தலின் போது மக்களுக்களித்த வாக்குறுதியொன்றை இந்த மக்கள் குழு நிறுவுவதின் மூலம் அரசாங்கம் நிறைவேற்றுகின்றது என்றார்.

நிதிபற்றாக்குறை காரணமாக இப்பொழுது இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படவில்லையென்றும் நிதிநிலைமை சரிவந்ததும் நாடு பூராவும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பருத்தித்துறை நகைக்கடை முதலாளிகொலை வழக்கு

## "காக்கா கடையில் தங்கி அவரைக்குத்தச் சொன்னார்"

### ஒப்புதல் வாக்குமூலம் பற்றி சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'தவராஜா எனக்குப் பணம் தருவதாகச் சொன்னார். தான் சொல்லும் வேலையை நான் செய்து முடிக்கவேண்டும் என்றும் அவர் என்னைக் கேட்டார். என்ன உதவி வேண்டுமானாலும் தாம் செய்து தருவதாக அவர் உறுதி கூறினார். காக்காவின் கடையில் என்னை ஓர் இரவு தங்கியிருக்கும்படியும் தங்கியிருந்து காக்காவுடன் கதைத்துக் கொண்டிருக்கும்படியும் பின்னர் காக்காவை கத்தியால் குத்தும்படியும் தவராஜா என்னைக் கேட்டார்'

இவ்வாறு பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலை வழக்கில் முதலாம் எதிரியான இராமச்சந்திரன் தமக்களித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்ததாக நேற்றுச் சாட்சியமளித்த சாவகச்சேரி நீதவான் திரு. கே. விக்னராஜா தமது சாட்சியத்தில் கூறினார். முதல் எதிரி இராமச்சந்திரன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டினார்.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் 68ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கும் 68ம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் திகதிக்குமிடையில் முகம்மது சுல்தான் முஹிதீன் என்பவரை கொலைசெய்ய சபாரத்தினம் ராமச்சந்திரன், செல்லத்துரை நடராசா ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்த ஒரே நோக்குடன் சூழ்ச்சி செய்ததாகவும் அந்தச் சூழ்ச்சியினால் அவர் கொலைசெய்யப்பட்டதாகவும் 68ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி ராமச்சந்திரன் என்பவர் முகமது சுல்தான் முஹிதீனை கொலைசெய்ததாகவும் அதே நேரம் அதே இடத்தில் நடராசா முதலாம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்கு உடந்தையாக இருந்தாரென்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலாம் எதிரி சார்பில் ஆர். ஈ. தம்பிரத்தினமும், 2ம் எதிரி சார்பில் அட்வகேட் ரி. தம்பித்துரையும் சாட்சியமளித்தவர்களை குறுக்கு விசாரணை செய்தார்கள். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரா ஆஜரானார்.

முதலாம் எதிரி இராமச்சந்திரன் தமது விருப்பத்தின் பேரிலேயே ஒப்புதல் வாக்குமூலமளித்தார். அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு அவருக்கு மீண்டும் வாசித்துக் காட்டப்பட்டது. மொழி பெயர்பாளர் அதை விளங்கப்படுத்தினார். இதன் பின்னர் எதிரி அதில் கையொப்பமிட்டார்." என்று நீதவான் திரு. கே. விக்னராஜா தமது சாட்சியத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

நான் தமிழ் பேசுவேன். எதிரிக்கும் தமிழ் தெரியும். மொழிபெயர்ப்பாளர் க. லேந்திரனுக்கும் தமிழ் தெரியும்.

எந்தவிதமான தூண்டுதலோ பயமுறுத்தலோ இருக்கவில்லையென்றும் எதிரி அடிகாயங்களுடன் வந்திருந்தால் அந்த வாக்குமூலத்தைத் தாம் பதிவு செய்திருக்க மறுத்திருப்பாரென்

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமான இன்று மாலை 6 மணி முதல் 7 மணிவரை நல்லை ஸ்ரீ ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் பிரசங்க ஆரம்பவிழாவும், இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

---

## 500 புதிய தாதிகள்

கோட்டை, புதன்

புதிதாக 500 மருத்துவ தாதிமார்களை சேவைக்கு எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

## மந்திரிசபையில் விரைவில் மாறுதல்?

கொழும்பு, வியாழன்

திருமதி சிறிமா பண்டாரநாயகாவைப் பிரதமமந்திரியாகக்கொண்ட மந்திரிசபையில் விரைவில் மாறுதல் ஏற்படவிருக்கிறது. இம்மாதம் 28ந் திகதியுடன் செனட் சபையின் ஆயுள் முடிவடைகிறது.

செனட்சபை உறுப்பினர்களாகவிருக்கும் இரு அமைச்சர்களும் மந்திரிசபையில் இடம்கொடுக்க வேண்டும்; அல்லது நியமன உறுப்பினர்களில் இருவரை ராஜினாமாச்செய்யச்சொல்லி அந்த இடங்களுக்கு இவர்களை நியமிக்கவேண்டும். இந்தக் காரணங்களினால் மந்திரிசபையில் மாற்றம் ஏற்படுவதை தவிர்க்கமுடியாததாகிவிட்டதென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

[சி பி ஏ]

**நாகம்ஸ் சினிமா**
கன்னாகம்
தினசரி 4 30
சனி, ஞாயிறு 10-30
SODOM and COMORRAH

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2 30
எல்லாம் உனக்காக

**REGAL Jaffna**
Daily 5 15 & 7-15 p. m.
Fra co Ne o
in
TEX S ADDIOS
(Cinemas cope)

தினசரி பி. ப. 2-00, 9-45
ஜெமினி—ஜமுனா
நடித்த
நல்ல தீர்ப்பு

**மனோகரா**
(யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு காலை 10-30
பம்பாயில்
சி. ஐ. டி. 555
(தமிழ்)

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
பெண்ணே நீ வாழ்க


**ராணி** (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன் - காஞ்சனா
நாகேஷ் - மனோகர் நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
# நாளும் தெரிந்தவன்

3-வது ஜனத்திரள் வாரம்

**வெலிங்டன்** (யாழ் நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30
இரவு 10-00 மணி.

**லிடோ** (யாழ். நகர்)
காலை 10-30, பி. ப. 2-00
மாலை 6-00, இரவு 9-30

மற்றும்
கெப்பிட்டல்—பிளாசா
திரைகளில்
நடிகர் திலகம்
சிவாஜி
கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா



நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்



# தெய்வ மகன்
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்


# இன்றைய பலன்

ஆவணி மாதம் 18-ம் திகதி
(3-9-71)

**மேஷம்:** கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம்பெறலாம். தூற்றல்களை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

**ரிஷபம்:** வெற்றி உமது அருகில் விரைந்து வரும். எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள். களஞ்சிரவழியாலும் நன்மைகள் சேரும்.

**மிதுனம்:** எக் கருமத்தையும் எண்ணித் துணிக. அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தைத் கோட்டைவிடக்கூடும்.

**கடகம்:** எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். இன்று தித்திப்பான தினம்.

**சிம்மம்:** பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள்.

**கன்னி:** சிந்தனை புதிர் போடும். சீறிவரும் கோபம் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். சிலருக்கு உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

**துலாம்:** வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்ததாக இருக்கும். கடன்வாங்கவும் நேரிடலாம். உடல்நலத்தைப் பேணிக் கொள்ளவும்.

**விருச்சிகம்:** மனம் நிறைந்த சம்பவங்கள் இடம்பெறும். பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். வீட்டிலும் மகிழ்ச்சியுண்டு.

**தனுசு:** அலைமோதும் எண்ணம் தலைதூக்கலாம். எண்ணியதை நிறைவேற்றுவதற்கு இடமுண்டு. எதிலும் நிதானம் வேண்டும்.

**மகரம்:** வயிற்றுக் கோளாறு தோன்றக்கூடும். உணவு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவும். அமைதி நன்று.

**கும்பம்:** பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடிமூலம் பணமும் பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

**மீனம்:** தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


**வெலிங்டன் சினிமா**
காணிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
மனோகர் - பி.எஸ்.சரோஜா
நடித்த
வண்ணக்கிளி


'கிறீன்பீல்ட்'

## நொக்கவுட் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விழாவை முன்னிட்டு யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் கரபந்தாட்ட நொக்கவுட் போட்டியில், நேற்று முன்தினம் முடிவடைந்த ஆட்டங்களின் விபரம் வருமாறு:

திருநெல்வேலி கலாஜோதி விளையாட்டுக் கழகத்துக்கும், வதிரி டைய்மன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் கலாஜோதி கழகம் மிக அவதானமாக விளையாடி 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

சங்கானை யுனைட்டட் கோஷ்டிக்கும், காரைநகர் துறை மகாமாரி கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சங்கானைக் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் ஈச்சமோட்டையுனைட்டெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், நவஜீவன்ஸ் கழகம் மிக இலகுவாக 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

காங்கேசன்துறை பாலா பிறதஸ் கழகத்துக்கும், திருநெல்வேலி சிவன் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த ஆட்டத்தில், பாலா பிறதஸ் கழகம் போட்டியில் பங்குபற்ற வராததினால், சிவன் கழகம் விளையாடாமலே வெற்றியைத் தட்டிக் கொண்டது. (தேறி)

## இரு சங்கங்களை இணைக்க முயற்சி

ஊரதீவு. வியாழன்
அகில இலங்கை அங்கீகரிக்கப்பெற்ற தமிழ்ப் பாடசாலை ஆசிரிய சங்கத்துடன் தீவுப்பகுதி ஆசிரியர் சங்கம் இணையவிருக்கிறது. இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் குறிப்பிட்ட இரு சங்கங்களுக்கிடையில் நடைபெற்று வருவதாகவும் இது பற்றிய இறுதித் தீர்மானம் அண்மையில் நடைபெறவிருக்கும் தீவுப்பகுதி ஆசிரியர்சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் எடுக்கப்படுமென்றும் தீவுப்பகுதி ஆசிரியர் சங்க நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.


## வரிவிளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

திரிதசலவைக்கு மிக்க வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள். பாவித்த வெற்றுறை ஒன்றை அனுப்பி எமது வெளியீட்டுப் புத்தகங்களில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்க வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

### விற்பனைக்கு

ராஜா படை மருந்து தேமல், சக்கஸ் பற்று, சகலவிதமான அரித்து நீர் வடியும் சருமவியாதிகளுக்கு சிறந்த பூச்சு மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3523

100 கலவன் வெள்ளை லெக்கோன் ஒரு மாதக் கோழிக்குஞ்சுகளும் பெரும் சாதி நாய்கள் வளர்க்கக் கூடிய 6X4X4 அடி இரும்புக் கூடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. 330, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 3541

### தேவை

யாழ்ப்பாண நகரிலுள்ள நெசவுநிலையத்துக்குநெசவுக் கல்லூரியில் பயிற்சிபெற்றுத் தேறிய ஆசிரியை தேவை. ஆங்கில அட்டெழுத்தும் தெரிந்திருந்தால் நல்லது. நெசவு வேலையில் தேர்ச்சியுள்ள பெண்களும் தேவை. நல்ல சம்பளம் (ஆசிரியருக்கு மட்டும்) ஊழியர் சகாயநிதி, போனஸ் மற்றும் சலுகைகள் உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3539, C/o ஈழநாடு'. யாழ்ப்பாணம் 3539

பழைய பித்தளை அல்லது பாவிக்க முடியாத நிலையிலுள்ள செம்புச் சாமான்கள் தேவை. தகுந்த விலை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3538

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின்
# 18-வது ஆண்டுவிழா
காலம்: 11—9—71

15 மைல் மரதன் ஓட்டப்போட்டி
காலை 6-30 மணி
வெற்றி வீரருக்கு 'K. N. M. மீரான் சாகிப்'. யாழ்ப்பாணம் அளிக்கும் தங்கப்பதக்கம்.

5 மைல் நீச்சல் போட்டி
காலை 7 மணி
வெற்றிவீரருக்கு 'சில்வா வாச் வேக்ஸ்' ஜுபிலி கோல், யாழ்ப்பாணம் அளிக்கும் வெற்றிக்கேடயமும் பரிசும்

யாவரும் கலந்து கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு: 11—9—71
காலை 6 மணி.

காரியதரிசி,
சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம்
வல்வெட்டித்துறை.

3542

**வின்சர்** யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ பி. எஸ். வீரப்பா ★ நிர்மலா
நடித்த
# சங்கமம்

## கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை

# முஸ்லீம் நாடுகளின் மௌனம்; எல்லைக் காந்தி கண்டனம்

காபூல், செப்டம்பர் 2

**முஸ்லீம் நாடுகள் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையில் இன்னமும் மௌனம் சாதிப்பதற்கு எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

காபூலில் பக்துனிஸ்தான் தினத்தை ஒட்டி நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் உரையாற்றிய திரு. கபார்கான் தொடர்ந்து பேசுகையில், முக்கியமான முஸ்லீம் நாடுகள் இன்னமும் மௌனம் சாதிப்பது வேதனைக்குரியது. இந்த முஸ்லீம் நாடுகள் அங்கு அரசியல் தீர்வொன்றைக் காண முன்வரவேண்டும். மேற்குப் பாகிஸ்தானியர்ன் நடவடிக்கை பாகிஸ்தான் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிப்பது மட்டுமல்ல, துணைக்கண்டத்தின் அமைதிக்கும் பங்கம் ஏற்படுவதாகும் என்று கூறிய திரு கபார் கான் பாகிஸ்தான் இராணுவத்தினர் கிழக்குப் பாகிஸ்தானில் லட்சக்கணக்கான வங்காளிகளைக் கொலை செய்துள்ளனர் ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பலுசிஸ்தான் மக்களும் சிந்து மக்களும் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் குதித்து கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவளித்து பாகிஸ்தானில் சிவில் அரசாங்கம் ஏற்பட வழிசெய்யவேண்டும் ஏனெனில் பாகிஸ்தானின் அடுத்த நடவடிக்கையினால் பாதிக்கப்படப்போகிறவர்கள் இவர்களேயாகும் என்றார்.

### இஸ்மாயில் எச்சரிக்கை

இதேவேளை பிரிக் ஷேக் முஜிபுர் மீதான விசாரணை தொடர்ந்து நடத்தப்பட்டு கடும் நிலைமையொன்றை ஜனாதிபதி யாஹ்யாகான் ஏற்படுத்தினால், அது மிகவும் பயங்கரநிலைமையை உருவாக்குமென இந்திய முஸ்லீம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில் சென்னையில் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

### இலங்கையருக்கு பிரிட்டிஷ் பட்டங்கள்

லண்டன், செப். 2

தற்போது இரு இலங்கையர்கள் பிரிட்டனில் வழக்குரைஞர் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. கே. வி. எஸ். கதிரமலைநாதன் (மிடில்டெம்பின்) கொழும்பைச் சேர்ந்த திரு. இந்திரா, எஸ். குலதிலகா ஆகியோரே இவ்விரு புதிய வழக்கறிஞராவர்.

மேற்கண்ட இலங்கை டாக்டர்கள் பிரிட்டனில் எப். ஆர். சி. பி. பட்டம் பெற்றுள்ளார்கள்.

டாக்டர்கள் வி. சிவலிங்கம், ஜி. ஜே. வி. பெரேரா, யு. எஸ். ரணதுங்கா, டொரிஸ். வி. பீரிஸ், எப் ஆர். சி. பாதி, டபிள்யு. ஜே. சோமஸ், பி. ஈ. குணவர்த்தன. வைத்தியத்துறையில் தம் ஆரம்பக்கல்வியைப் பெற்ற இந்த டாக்டர்கள், இப்பொழுது ஸ்கொத்லாந்து எடின்பேர்க்கில் எப் ஆர் சி பி பட்டம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### டாலர் நெருக்கடி பற்றி சோவியத்தில் அக்கறை

வாஷிங்டன், செப். 2

அமெரிக்க டாலர் நாணயத்தின் மதிப்பைப் பாதுகாத்தும் கொள்வதற்கு அதிபர் நிக்ஸன் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மாஸ்கோவில் பெரும் அக்கறை ஏற்பட்டிருப்பதாக 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' விமர்சித்துள்ளது.

உலகில் சோவியத்யூனியன் தென்னாபிரிக்காவுக்கு அடுத்தபடியாக பெருமளவில் தங்கம் உற்பத்திசெய்யும் நாடுகளில் ஒன்று பொது மைசல கட்டிங்களைக் கட்டுவதற்குத்தான் தங்கம் பயன்படும் என லெனின் கூறியிருந்தபோதிலும் தங்கத்தின் பெறுமதியில் ஏற்படும் உயர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் நவீன கம்யூனிஸ்ட் நாடுகள் தங்கத்தின் மீது பொருளாதார ரீதியில் மதிப்புவைத்து வருகின்றன. சோவியத் யூனியன் தனது கையிருப்பில் எவ்வளவு தங்கத்தை வைத்திருக்கிறது என்பது எவருக்கும் தெரியாது தெரிந்தாலும் எவரும் அதைவெளியிடுவது மில்லை இது அரசாங்கத்தின்பெரும் இரகசியமாகப்பாதுகாக்கப்படுகின்றது வர்த்தகரீதியில் அதற்கு அதிகமதிப்பு உண்டு என்று அமெரிக்க வானொலி விமர்சனம் கூறியது.

மேற்கு நாடுகளுடனான வர்த்தக விஷயங்களில் பொதுவாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வெளியிலான வர்த்தகங்களில் சோவியத்யூனியன் ரூபிளின் மதிப்பு அமெரிக்க டாலரின் மதிப்புக்கு ஏற்றாற்போலவே நிர்ணயிக்கப்படுகின்றது.

கம்யூனிஸ்ட் நாடுகளுடனான வர்த்தகம் பெரிதும் பண்டமாற்று முறையிலேயே நடைபெறுகின்றது பொருட்களின் விலைகள் அரசாங்கங்களின் விருப்பப்படி நிர்ணயிக்கப்படுகின்றன என்றாலும் உலக விலைகள் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றன என்று அமெரிக்கவானொலி கூறியது.



### புதிய நொத்தாரிசு

சரவெட்டி கிழக்கைச் சேர்ந்த பண்டிதர் க. மயில்வாகனம் அண்மையில் பிரசித்த நொத்தாரிசாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரான இவர் உடுப்பிட்டி எம். பி. திரு ஜெயக்கொடியின் சகோதரராவார்.

சர்வதேச நீதிமன்றத்தில்

### விமானக் கம்பெனிமீது இந்தியா வழக்கு

ஹேக், செப். 2

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்துச் சேவைக்கு எதிரான வழக்கு ஒன்றை ஹேக்கிலுள்ள சர்வதேசநீதி மன்றத்தில் இந்தியா தாக்கல் செய்துள்ளது.

இந்தியப் போக்குவரத்து விமானம் ஒன்றைச் சில மாதங்களுக்கு முன் இரு காஷ்மீரிகள் வழிமறித்துக் கடத்திச் சென்று பாகிஸ்தானில் வைத்து அழித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் விமானங்கள் இந்தியா மீது பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை எதிர்த்துப் பாகிஸ்தான் அரசாங்கம் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனத்திடம் முறையீடு செய்தது. இதைச் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனம் ஏற்றுக்கொண்டு இந்தியாவின் செயலை விசாரணை செய்ய முடிவு செய்தது. இதற்கு எதிராகவே இப்பொழுது ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் இந்தியா வழக்கு தொடர்ந்துள்ளது.

**ஷேக் விசாரணை 2 வாரத்தில் முடியும்**

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீதான விசாரணை இன்னும் 2 வாரங்களில் முடிவடைந்துவிடுமென ஐக்கிய நாடுகளுக்கான பாகிஸ்தான் தூதுவர் திரு. ஆகா சாஹி ஐ. நா. பொதுக் காரியதரிசியிடம் கூறியிருக்கிறார்.

முஜிபுர் மீதான விசாரணை ஆகஸ்ட் 11ந் திகதி தொடங்கி நடைபெறுகிறதென்ற உண்மையை உறுதிப்படுத்தியதோடு எங்கு விசாரணை நடைபெறுகிறதென்பதைக் கூற மறுத்துவிட்டார்.

கிழக்குப் பாகிஸ்தான் பத்திரிகைகளைப் பாகிஸ்தான் அரசாங்கம் கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்கு ஆசியப் பத்திரிகையாளர் நிறுவனம் குறை கூறியுள்ளது. இந்நிறுவனம் மேலும் தெரிவித்திருப்பதாவது: பாகிஸ்தான் இராணுவம் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பெரும்பாலான பத்திரிகைகளை அழித்துவிட்டது. இவர்களின் கொடுமைக்கு அஞ்சிப் பல பத்திரிகை ஆசிரியர்கள் நாட்டை விட்டே ஓடிவிட்டனர். பல பத்திரிகைக் காரியாலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

### சாரதிகள் மீது கடும் நடவடிக்கை

கோட்டை, வியா

"பஸ்ஸில் இடம் இருக்கும் போது பிரயாணிகளை ஏற்றிச் செல்லாது விட்டுச் செல்வது ஒரு குற்றமாகும். இதுபோன்ற குற்றங்களைச் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என இ. போ. ச தலைவர் திரு அனில் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலி வீதியில் வாகனங்களை வேகமாக ஓட்டிச் சென்றமை, நேர சூசிகையின்படி சேவை செய்யாமை, சில இடங்களில் அதிக நேரம் தாமதித்துவிட்டு குறித்த நேரத்திற்கு முன்பே டிப்போக்குச் செல்லுதல் போன்ற குற்றங்களைச் செய்தமைக்காக 21 சாரதிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதைவிட மேலும் 1500 பேருக்கு அதிகமான சாரதிகட்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

### அரை நாள் வேலை சிரமதானம்

மன்னார், வியா

மன்னார்க் கோட்டையிலுள்ள கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் திருக்கேதீஸ்வர ஆலயக் கட்டட வேலைகளுக்கு உதவும் பொருட்டு அரைநாள் வேலையைச் சிரமதானமூலம் செய்தனர். களஞ்சியக் காப்பாளர் திரு. பாலசுந்தரம், கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஜனாப் அ. மு. புகாரி ஆகியோர் மேற்பார்வையில் சிரமதானம் நடைபெற்றது.

காரை. வடக்கு கி. சபையின்

### 'வரி உயர்வை ஏற்காதீர்"

ஊரதீவு, வியா

1972-ம் ஆண்டிலிருந்து காரைநகர் வடக்குக் கிராம சபை தனது வரியை மூன்று வீதத்தால் அதிகரிக்கவிருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டாமெனவும் இப்பகுதியிலுள்ள பெரும்பான்மை மக்கள் இதை எதிர்ப்பதால் இப்பகுதி மக்களின் கருத்தை இவ்வரி சம்பந்தமாக அறியும் பொருட்டு ஜனநாயக ரீதியான பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறும் காரைநகர் வடக்கு பயிர்ச்செய்கைக் குழுத் தலைவர் திரு. ஏ. கனகசபை, உள்ளூராட்சி உள்நாட்டு பொது நிர்வாக அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைக் கோரியுள்ளார்.

அத்துடன் 1963-ம் ஆண்டு தொடக்கம் 1970-ம் ஆண்டு வரை ஏன் வரியை அறவிடப்படவில்லை என்பது பற்றியும் பழமையான வரியுடன் பத்து வீதமான மேலதிகக் கட்டணம் ஏன் வசூலிக்கப்பட்டது என்பது பற்றியும் விவசாயிகளையும் நாளாந்தம் கூலிவேலை செய்துழைக்கும் தொழிலாளர்களையும் பெரும்பான்மையாகக் கொண்ட இக்கிராமசபை வரிப்பணத்தைத் தவணைக்கட்டணமாக வசூலிக்கப் பின்னிற்பது ஏன் என்பதுபற்றியும் விசாரணை நடத்துமாறும் கிராமசபையின் வரிஉயர்வுக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டாமெனவும் அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

### 'தக்காளி கொள்வனவு செய்க"

சங்கானை, வியாழன்

கொக்குவில் கோண்டாவில் கோப்பாய் போன்ற இடங்களில் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளது இதற்கு அரசாங்கம் கட்டுப்

5-ம் பக்கம் பார்க்க

30-வது மஹாஜன சம்பத

மஹாஜன சம்பத மேலும் பல பெரும் செல்வங்களை உங்களுக்கு வழங்குகிறது!

(விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்)

தேசிய லொத்தர் சபை

முல்லைத்தீவு குழந்தைகள் கொலைவழக்கு

# பொன்மணி கிணற்றுள் குதிப்பதைக் கண்டேன்

முல்லைத்தீவு, வியாழன்

"மீண்டும் திரும்பிப்பார்த்தபோது பிள்ளையைத் தூரத்திற்கொண்டு வந்த பொன்மணி கட்டியிருந்த சேலையைக் கழற்றிவிட்டு பாவாடை சட்டையுடன் இரு குழந்தைகளைப் பிடித்துக்கொண்டு கிணற்றுக்கட்டில் இருப்பதைக்கண்டேன். சற்றுத் தூரம் சென்று மீண்டும் திரும்பிப்பார்த்தபோது "அந்தப் பெண் கிணற்றுக்குள் குதிப்பதைப்பார்த்து 'ஐயோ' 'ஐயோ' என்று சத்தம் போட்டேன்."

தான் பெற்ற இருபச்சிளங் குழந்தைகளையும் கிணற்றில் போட்டுக் கொலை செய்ததாக பொன்னம்பலம் இரத்தினம் என்பவரின் மனைவியான பொன்மணி மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் வல்லிபுரம் வேலுப்பிள்ளை என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

முல்லைத்தீவு மாஜிஸ்திரேட் திரு. விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் இவ்வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

முள்ளியவளையைச்சேர்ந்த பொன்மணி தனது இரண்டரை வயதான ஜெயராஜினி, ஒரு வயதான ஜெயரஞ்சன் ஆகிய இருவரையும் கிணற்றில் போட்டுக் கொலை செய்ததாக முல்லைத்தீவுப் பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

வல்லிபுரம் வேலுப்பிள்ளை தொடர்ந்து தனது சாட்சியத்தில் கூறியதாவது:

'சம்பவதினமான 9-8-71 காலை 9 மணியளவில் தண்ணீரூற்றில் இருக்கும் ஊத்தங்கரை பிள்ளையார் கோவிலடியில் இருக்கும் ஓர் வைத்தியரைக்காண நான் முள்ளியவளைக் கந்தசாமி கோவிலடி வீதியால் சென்ற போது எதிரியான பொன்மணி பிள்ளைகளுடன் செல்வதைக் கண்டேன். நான் மாங்குளம்-முல்லைத்தீவு ரோட்டில் ஏறியபோது பிள்ளையின் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தபோது பொன்மணி ஓர் பிள்ளையை துரத்துவதைக் கண்டேன் பிள்ளை ஓடிவிட்டது. பின்பு நான் சற்றுத் தூரம் சென்ற போது மீண்டும் திரும்பிப் பார்த்தேன் அப்போது பொன்மணி தனது சேலையைக் கழற்றிவிட்டு பாவாடையுடனும் மேல் சட்டையுடனும் தனது இரு பிள்ளைகளுடனும் கிணற்றுக் கட்டில் இருப்பதைக் கண்டேன். பின்பு நான் சற்றுத் தூரம் சென்ற போது மீண்டும் திரும்பியபோது எதிரியான அவர் கிணற்றில் குதித்ததைக் கண்டு சத்தமிட்டேன். அப்போது நடராசா என்பவர் ஓடிவந்து கிணற்றில் குதித்தார். பொன்மணியைக் காப்பாற்ற முற்பட்ட போது பொன்மணி அவருக்கு கடித்துத் தன்புறுத்தினார் ஆனால் எதிலிருந்தும் எதிரி பொன்மணியை காப்பாற்றி வெளியேற்றினார். அதன் பின் பொன்மணியின் கணவரான இரத்தினம் ஓடிவந்து கிணற்றில் குதித்து ஒரு பிள்ளையை மீட்டார். பிள்ளை இறந்து இருந்தது. பின்பு வேறொருவர் கிணற்றில் குதித்து மற்றப் பிள்ளையையும் மீட்டார். அப் பிள்ளையும் இறந்திருந்தது. பின்பு நான் முல்லைத்தீவு பொலிஸில் என் முறைப்பாட்டை கொடுத்தேன்.

முல்லைத்தீவு உதவி வைத்திய அதிகாரி டாக்டர் எல். மதிமநாதன் சாட்சியமளித்தார். இம்மாதம் 20-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## கல்வி மந்திரியிடம் கோரிக்கை

மாவிட்டபுரம், வியாழன்

"பாடசாலை கடைசித் தவணை நாளை நீடித்து திருவெம்பா திருவிழாக் காலத்தில் பாடசாலைகளுக்கு விடுமுறை நாளாக்க வேண்டும்"

இவ்வாறு சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை, அகில இலங்கை வேதாகம சித்தாந்தசபை ஆகிய சபைகள் கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளன.

கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத்துக்கு அனுப்பப்பட்ட இம்மகஜரில், சைவ மக்களுக்கு முக்கியமானதாகவும், பக்திபரவசமானதாகவும் திருவெம்பா திருவிழா அமைந்துள்ளது. இத்திருவெம்பாவை யொட்டி 10 நாட்கள் காலையில் பூசைகள் நடைபெறுவது வழக்கம் ஆதலால் பெரும்பான்மையான சைவ மாணவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் இப்பூசைகளை சிறப்புற நடத்தவும், வழிபாடு செய்யவும் திருவெம்பா காலத்தை விடுமுறையாக்க வேண்டும். கடைசித் தவணையை இத் திருவெம்பா 10 நாட்களுக்கும் வரக்கூடியதாக திருத்தி உதவும்படி கோரியுள்ளன.

## முன்னாள் உப வேந்தருக்குப் பாராட்டு

கோட்டை, வியாழன்

மாணவர்களுடன் அனுதாபத்துடனும் சிறிதேனும் கர்வமின்றி நேர்மையாகவும் நட்புடனும் பழகும் இவரது தன்மை பாராட்டுக்குரியதாகும் மேற்கண்டவாறு பேராதெனிய சர்வகலாசாலை மாணவ மன்றத்தினர் முன்னாள் பேராதெனிய சர்வகலாசாலை உபவேந்தரும் பேராசிரியருமான திரு. இ. ஓ. இ. பெரேரா தம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையிட்டு அவரது சேவையைப் பாராட்டி பிரதமருக்கு அனுப்பிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மன்றத்தினர் மேலும் தம் வாழ்த்தினை உபவேந்தருக்கும் அவரது பாரியாருக்கும் தெரிவித்துள்ளனர்.

## திருமலையில் பூர்வீகப் பொருட்கள் கண்டுபிடிப்பு

உப்புவெளி, வியா

இலங்கை வரலாற்றில் மிகவும் தொன்மையான காலப் பகுதிக்குச் சொந்தமானதெனக் கருதப்படும் பொருட்கள் திருகோணமலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சனசஞ்சாரமற்ற பகுதி ஒன்றில் ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று இலங்கை வரலாற்றில் மிகவும் தொன்மை வாய்ந்ததெனக் கருதப்படும் குகைகள் மற்றும் தாதுகோபுரம் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குகையில் பூர்வீக வடிவங்கள் இருப்பதாகவும் அங்கு காணப்பட்ட தாதுகோபுரத்திற்கு ஏறிச்செல்வதற்கான படிகள் இருந்ததாகவும் அவ்வாராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். இப்பொருட்கள் மன்னன் கவன்தீசன் காலத்தவை என்று கருதப்படுகிறது.

கவந்தீசன் காலம் கி. பி. 247ம் ஆண்டாகும். இம்மன்னன் தற்பொழுது கதிர்காமம் என்றழைக்கப்படும் மாகம என்ற இடத்திலிருந்து ஆட்சிபுரிந்து வந்தவன் என்பது வரலாறு.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், வியாழன்

கட்டுவன் தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலைத் தலைமையாசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. எஸ். சிவகுருவின் சேவையைப் பாராட்டி பிரிவுபசார விழா ஒன்று நடைபெற்றது. பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் பலர் பாராட்டுரை வழங்கினார்கள். விழாவுக்கு திரு. சி. நாகலிங்கம் தலைமைவகித்தார் வெகுமதிகள் அளிக்கப்பட்டன. திரு எஸ் சிவகுரு தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்

## பல்புகள் அடிக்கடி களவு

பருத்தித்துறை, வியாழன்

நெல்லியடிப் பட்டின சபைக்குச் சொந்தமான மின்சார விளக்குகள், உதிரிப் பாகங்கள் ஆகியன அடிக்கடி திருட்டுப்போவதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. திருட்டுப்போன பொருட்களின் பெறுமதி ரூபா 1000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பகுதியிலுள்ள தியேட்டர் ஒன்றிலிருந்தும் மிக விலையுயர்ந்த இயந்திரப் பாகங்கள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.


வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது.

உங்களுக்குத் தேவையானது

றெபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனால் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனால் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்.

ஓர் றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

# புலன்களுக்கு ஆண்டவன் வெகுதொலைவில் இருக்கிறார்

—குருபாவா—

["உண்மையான அறிவுக்கு இறைவன் மிகவும் அருகில் இருக்கிறான் ஆனால் புலன்களுக்கு அவன் மிகவும் தொலைவில் இருக்கிறான்."

இவ்வாறு சங்கைக்குரிய செய்க் முஹைதீன் குருபாவா கூறினார். சில தினங்களுக்குமுன் "ஸாந்திப்குலி-ஞான அறிவை குருவிடம் அறிந்துகொள்ளும் குழு"வின் ஆதரவில் யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரைநிகழ்த்தினார். அந்தச் சொற்பொழிவின் ஒருபகுதி இங்குதரப்படுகிறது. கேட்டெழுதியவர் "மயிலை"]

ஆண்டவன் இருக்கிறான் என்று சொல்கிறார்கள். நாமும் அப்படித்தான் நினைக்கிறோம். கடவுளைக் கண்டவர்கள் சொன்னார்கள் நாம் காணத் துடிக்கிறோம். எங்கும் இறைவன் வியாபித்திருப்பதால் அவனைக்காண்பது சுலபம்; ஆனால் மனிதனைக்காண்பது கடினம்.

மனிதன் ஆண்டவனைத் தேடித்திரிகிறான். ஆண்டவன் மனிதனைத் தேடித்திரிகிறான். இறைவன் மனிதனை பரிசுத்த இடத்திலிருந்து பரிசுத்தமாகவே படைத்து ஐம்பூதங்களால் ஆனவீட்டில் அமர்த்திவைத்தான்.

மனிதன் இந்தவாடகை வீட்டைச் சொந்தமாக்கிக்கொண்டு, வேறு இடத்துக்குப் போகாமல் இருக்க முயல்கிறான். புலனை புலன் விரும்பி, உடலை உடல் விரும்பி மாசுகளை ஏற்றுக்கொண்டான். இந்த உலகத்திலுள்ள பொருட்களையும், அவற்றின் தன்மைகளை அறிந்து தீமைநீக்கி நல்லதைக் கொண்டபிறப்பற்ற வாழ்வைப்பெறவே இறைவன் மனிதனைப்படைத்தான்!

நம்மையும் தெரிந்து நம்மைப் படைத்தவனையும் தெரிந்து, உலகத்தையும் தெரிந்து வாழும் தன்மையை பெற்ற இறைவன் படைத்தான் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உண்மையை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

மனிதனும், மனிதமாயும் நாம் வாழவேண்டும் உள்ளத்தையும்-மனித உள்ளத்தையும் கொல்லாமைவேண்டும்.

இறைவனை அடைவதற்கு மனிதன் இறையுணவேண்டும். அவன் குணத்தை நாம் பெற்றால்தான் நாம் அவனைக் காணமுடியும் எல்லா உயிர்களிலும் கருணைவேண்டும். தன் உயிரைஎல்லாவுயிர்களிலும் காணவேண்டும் இவ்வமான இறைவனைக்காண உலகிலிருந்து பிறக்கும் பாவப்பொருட்கள் எம்மைவிட்டு நீங்கவேண்டும்.

வாக்காலும் மனத்தாலும் காணமுடியாத இறைவனைக் காண சில அத்தாட்சிகள் உண்டு. புலன் காட்சி மனக் காட்சி மற்றுமுள்ள காட்சிகளாலும் நாம் இறைவனை உணரமுடியும்.

நம்பவேண்டிய பொருள் இன்னது. நம்பிக்கையான பொருள் இன்னதுஎன்பதை தாம்ஒவ்வொருவரும் உணரவேண்டும் ஒவ்வொரு ஜடப்பொருளையும் இயக்க ஒருவரை அமர்த்தவேண்டியுள்ளது அப்படி இல்லாத பட்சத்தில் ஆபத்தாகிவிடுகிறது. ஆனால் இறைவன் படைத்த உயிரினங்கள்யாவும் தாமே செயல்படுகின்றன.

## ஆறுமுகம்

ஒவ்வொருவருக்கும் ஆறுமுகங்கள் உண்டு. ஐம்புலன் ஐந்துமுகம், ஞானம் ஆறாவது முகம். எந்தப் பொருள் நம்மைப்படைத்ததோ அதை ஆராயும் அறிவே ஞானம். இதைத் தெரிந்தான் ஆறுமுகன் என்றும் மற்றுமுள்ள சமயக் கடவுள்களாகவும் சொல்லப்படுகிறது.

உண்மையை விளக்கும் அறிவுபெற்றதும் மனிதன் இதயத்தில் இறைவனுக்குரிய கோயில் கட்ட வேண்டும். நம் முன்னோர்களின் அறிவுச் செல்வக் களஞ்சியமான திருக்குறளை பைபிளை நீங்கள் பாடுவதில் என்ன பயன், அவர்கள் தங்கள் உள்ளத்தில் உதித்தவற்றைப் பாடிப் பலனைப் பெற்று உயர்ந்தார்கள். நீங்களும் உங்கள் உள்ளத்தில் எழும் நல்லவற்றை வெளியில் கொண்டு வாருங்கள். அதனால் உங்களுக்குப் பயன் கிடைக்கும். இறைவன் இருக்கும் உள்ளமாகிய கோயிலை இழிந்த செயல்களில் செலுத்தி இடித்து விடாதீர்கள். அப்படி நீங்கள் செய்வீர்களாயின் அவ்வாலயத்தில் இருக்கும் இறைவன் எவ்வித சாட்சியமும் இல்லாது உங்களைத் தண்டிப்பான்.

வெள்ளிக்கிழமையில் மட்டும் உயிர்க்கொலை செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டு மற்ற நாட்களில் கொலைசெய்து உண்டால் என்னபிரயோசனம், எனக்கு ஒரு கடமைதான் உண்டு, ஆனால் உயிரினங்களுக்குப் பல கடமைகள் நாம் வைத்திருக்கிறோம், இறைவனால் படைக்கப்பட்ட சகல ஜீவராசிகள் மீதும் வாஞ்சையும் செய்யாது அவற்றிற்குத் துன்பம் செய்துகொண்டே இறைவனை வழிபடுவதால் என்ன பயன். நாம் இந்த தீய தன்மைகளை நீக்கி அறிவைப்பெற்று பகுத்தறிவால் எவற்றையும் பகுத்துணர்ந்து பேரறிவால் அறிவுக்குள் அறிவாய் நிற்கும் ஆதி பரஞ்சோதியைக் காண வேண்டும்.

உண்மையான அறிவுக்கு இறைவன் மிகவும் அண்மையில் இருக்கிறான், ஆனால் புலன்களுக்கு அவன் மிகத் தூரத்தில் இருக்கிறான். அறிவுக்குக் கிட்ட இருக்கும் இறைவனைக் காண 40 நாள் விரதம் இருக்கிறோம், ஆலயங்களைச் சுற்றி வருகிறோம் இதனால் இறைவனைக் கண்டுவிடமுடியாது. ஆசையால் புலன்வழிசெல்லாது அறிவு வழியில் சென்றால் இறைவனை அடைவது மிகவும் சுலபம்.

நாம் அவனுக்கு வாகனமாக வேண்டும். இறைவனுக்கான மதம் படைத்து இப்பொழுது ஒவ்வொரு மதமும் ஒவ்வொன்றைப் பிடித்துச் சாப்பிடப் பார்க்கிறது.

இறைவன் மதத்துக்குள்ளோ ஜாதிக்குள்ளோ இருக்கவில்லை.

உள்ளத்தை இறைவனே அறிவான், அவற்றைத் திறந்து பார்த்து அதற்கேற்ப தீர்ப்பவன் அவன் தான், எண்ணங்களிலும் செயல்களிலும் குணங்களிலும் பார்வையாக இருக்கின்றன. இவர்கள் யாவரையும் அன்பால் இறைவன் காத்து வருகின்றான்.

## சமயம்கடந்த பொருள்

சமயம் பலவிதம் சமயம் சமோசிதமாக இருக்கின்றது அறநூல்கள் சொன்னவற்றை மறந்து தன்னலம் பேசும்பொழுது அவ்வறங்களை அந்நிலையில் மறந்து விடுகிறோம், சமயங்களெல்லாம் கடந்த தத்துவப் பொருள் உண்டு, என்றும் அழியாப் பொருளாக இருக்கிறது சமயத்தின் தன்மையை -தன்புலனைத்தான் காண்கிறோம், நாம் வேண்டுவது சமயங்கடந்த பொருளைத்தான், மனிதன் சமோசிதமாக நடந்து மனிதனை மனிதன் அடித்துப் பிழைத்து நடப்பது பாவம், கோயில்கள், பூசைகள் புலன்களாகவும் இருக்கத்தான்வேண்டும், அறிவும் இருக்கத்தான் வேண்டும், கருணை அன்பும் இறைவன் குணங்களையும் நாம் தெரிந்து வாழவேண்டும். இறைவனை ஒரே பொருளாகக் காணும் நம்முள் பிரிவினையை வளர்த்தால் இறைவனும் பிரிவினைப் பட்டு விடுவான்.

உண்மையாக இறைவனுடன் பேசி மகிழ்வதுதான் உண்மையான இன்பம், பல இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டாலும் எங்கும் வியாபித்திருக்கும் இறைவனுக்கு எவராலும் கோயில் கட்ட முடியாது, அவனுக்கு உள்ளத்தில் கோயில்கட்ட வேண்டும்.

உண்மையை அறிந்து கொள்வது கஷ்டம், ஆனால் பொய் பரவுவது மிகவும் சுலபமாகிறது. நாம்திருந்துவது மட்டுமல்ல நம்மைச் சேர்ந்தவர்களையும் அதன் வழி செலுத்த வேண்டும்.

மதத்தால் மதம்பிடித்து மற்றவர்களை அழிப்பது நல்லதல்ல. மனிதனை இறைவன் தன்னைப்போல் ஆக்கவே முயன்று வருகின்றான். இதை நாம் உணரவேண்டும். இந்த நிலையைமனிதன் அடைந்துவிட்டால் பிரிவினை இல்லை துன்பம் இல்லை, நீங்கள் ஒற்றுமையாக இருந்தால் உங்களை வெல்லயாராலும் முடியாது

## தக்காளி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுவிலை ஒன்றை குறிக்காமையாலும் கொள்வனவுப் பகுதியினர் இதனை வாங்க முன்வராமையாலும் இங்குள்ள பிரதிநிதிகள் வியாபாரிகள் இதனை ஓர் சந்தர்ப்பமாக வைத்து தக்காளி விலை மிகக்குறைந்துவிட்டதென பொய்ப் பிரசாரம் செய்து உற்பத்தியாளரிடம் விலை குறைத்து வாங்குகிறார்களாம் இதனால் கமக்காரர் மிக நஷ்டம் அடைய நேரிடுகின்றது இவ்விதம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தக்காளி கொள்வனவு செய்ய முன்வரும்படி மார்க்கட்டிங் இலாகா மேலிடத்தை வேண்டியுள்ளனர்

யு. எஸ். பொருளாதார நெருக்கடி

# 50 லட்சம் யு. எஸ். ஊழியருக்கு சம்பள உயர்வு இல்லை

வாஷிங்டன், செப். 2

அமெரிக்காவில் சுமார் 50 லட்சம் அரசாங்க ஊழியர்களுக்கு இந்த ஆண்டில் சம்பள உயர்வு இல்லை.

அமெரிக்கப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு அதிபர் நிக்ஸன் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

அடுத்த பத்துமாதங்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிப்பதை நிறுத்திவைக்க வேண்டுமென அதிபர் நிக்ஸன் காங்கிரஸ் சபைக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த ஆண்டிலும் இம்மாதிரி சம்பள உயர்வு நிறுத்திவைக்கப்படலாம் என்று அதிபர் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரம் ஸ்திரம் பெற்றதும் நிலைமை மாறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# களவுக்கு வந்தவரை கிணற்றிலிருந்து மீட்பு

சுழிபுரம், வியாழன்

மூளாயிலுள்ள ஒருவீட்டில் நள்ளிரவில் களவெடுக்க முயன்ற ஒரு கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் அவ்வளவிலுள்ள கிணற்றுள் நின்று அவதிப்படுகையில் ஊரவர்களால் பிடித்து சங்கானைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று நடைபெற்றது

திருமதி சின்னத்தம்பி தங்கமுத்து என்பவருடைய வீட்டுக்கு நள்ளிரவில் வந்த திருடர் கோஷ்டியொன்று வீட்டுக்கதவைத் திறக்கும்படி பலதடவைகள் தட்டியதாகவும் உள்ளே தனியாகவிருந்த பெண்கள் கதவைத் திறக்காமலேயே யார்? யார் என்று கேட்டதாகவும், கதவைத் திறக்கும்படி அவர்களிடமிருந்து பதில்வரவே அந்தப் பெண்கள் கள்வர், கள்வர் என்று கூக்குரலிட்டதாகவும் அயலவர்கள் அவ்விடத்துக்கு ஓடிவரவே, அவ்விடத்திலிருந்து ஓடிய கள்வர்களில் ஒருவர் அவ்வீட்டு வளவிலிருந்த கிணற்றுள் தவறி விழுந்துவிட்டதாகவும் மறுநாட் காலைவரை கிணற்றுள்நின்ற அந்தநபரை உடம்புஎல்லாம் விறைத்த நிலையில் அயலவர் மீட்டதாகவும் தெரிகிறது.

கைதடி மறவன்புலோவை சேர்ந்த மூவர் அவ்வீட்டுக்கு களவெடுக்க வந்ததாகவும், தப்பிஓடும்போதேதான் கிணற்றில் விழுந்துவிட்டதாகவும் பிடிபட்ட அந்த நபர் சங்கானைப்பொலிஸில் வாக்குமூலம் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

இப்பகுதியில் கடந்த சில தினங்களாக களவு அதிகரித்திருப்பதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## நாடகமும் இன்னிசையும்

யாழ்ப்பாணம், வெள்ளி

நடிகமணி வி வி வைரமுத்து குழுவினரின் 'சம்பூர்ண அரிச்சந்திர' நாடகமும் திரு ஆர் கிருஷ்ணமூர்த்தியின் இசைக் கச்சேரியும் நாளை சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது கலட்டி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாண மேயர் திரு அல்பிரட் துரையப்பா தலைமைவகிப்பார்

'மொடேன்' ஸ்தாபனத்தாரின் ஆதரவில் மின்னொளியில் பலவிதமான கம்படிக் காட்சிகளும் இவ்விழாவில் இடம்பெறவிருக்கின்றன.

## நூல் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியார் மத்திரி ஞானவைரவசுவாமி பதிகம் மேற்படி ஆலயத்தில் நாளை பிற்பகல் அரங்கேற்றப்படவிருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் திரு. சி. உ. சோமசேகரம் வரவேற்புரை நிகழ்த்துவார். வர்த்தகர் திரு சி. சின்னத்துரை முதற்பிரதிபெறுவார்.

முதலியார் செ முத்துத்தம்பி, நியமன எம்.பி. திரு எம் வி சுப்பிரமணியம், வைத்திய அதிகாரி டாக்டர் இ அருள்பிரகாசம், ஆஸ்திக திருச்சைவ மகாசபை உபதலைவர் திரு க சோமசுந்தரம், திரு மு வி செல்லத்துரை, வித்துவான் க. நவேலன், இரசிகமணி கனக செந்திநாதன், திரு பரம் எஸ் தில்லைராஜா, மதுரகவி இ நாகராஜன், கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை, வித்துவான் க கணபதிப்பிள்ளை முதலியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

விமர்சனம்

## சங்கமம்

வெவ்வேறாகப் பிரிந்து செல்லும் நதிகள் ஆறுகள் கடலுடன் போய் சேருமிடத்தைச் சங்கமம் என்று சொல்வார்கள் அது புனித தீர்த்தமென்றும் கருதப்படுகிறது. 'சங்கமம்' படக்கதையும் வேறுபட்ட இரு குணசீலங்களையுடைய அண்ணனும் தம்பியும் எவ்வெல்லாமோ திரிந்து என்னென்னவோ செய்து கடைசியில் சங்கமமாகின்றனர்.

அண்ணனும் தம்பியுமாக ஜெமினிகணேசன் இரட்டை வேடத்தில் இயன்றவரை சிறப்பாக நடித்திருக்கிறார். அவருக்கிணையாக முத்துப் பல்லழகி என்று வர்ணிக்கப்படும் கே ஆர் விஜயா தனது திறமையைக்காட்டி நடித்திருக்கிறார். நிர்மலாவும் சோடைபோகாமல் சிறப்பாகத் தனது பாகத்தைச் செய்திருக்கிறார்.

ஜெமினிகணேசன் இப்படியும் சண்டைபோடுவாரா என்று பிரமிக்கிறோம். வில்லன்வீரப்பாவும் சக்கைபோடு போடுகிறார்.

அருமையான படப்பிடிப்பு, நல்ல கதை சிறந்த டைரக்‌ஷன் அர்த்தமுள்ள வசனமும் பாடல்களும் இத்தனையும் சேர்ந்து பல தடவை பார்த்து மகிழத் தூண்டுகிறது யாழ் வின்சர் திரையில் இப்போது காட்சியளித்துக் கொண்டிருக்கும் வண்ணப் படமான 'சங்கமம்'.

—ஜி.

## சனநெரிசலில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மரணங்கள் ஏற்பட்டனவாம். ஸ்கூட்டர் கடையொன்றின் முன்னால் இந்த விபத்து ஏற்பட்டது.

கூட்டத்தைக் கட்டுப்படுத்த 600 பொலிசார் கடமையாற்றினர்.

## மணிவாக்கு

கடவுள் செல்வத்தை உயர்ந்த பொருளாக மதித்திருந்தால் அதை அயோக்கியருக்கு அளித்திருக்க மாட்டார். — ஸ்விஃப்ட்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 18-ந் திகதி (3-9-71)


## பிரதேச கலாமன்றம்

கடந்த சில ஆண்டுகளாகச் செயல்படாமலிருக்கும் வடபகுதிப் பிரதேச கலாமன்றத்துக்குப் புத்துயிரூட்டி மீண்டும் ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை யாழ். இலக்கிய வட்டம் ஒரு தீர்மானத்தின்மூலம் கேட்டிருக்கிறது. நியாயமான இக்கோரிக்கையை அரசாங்க அதிபர் நிறைவேற்றுவாரென்று எதிர்பார்க்கலாம்.

நாட்டின் கலை கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கொள்கை. ஒரு கழகமோ ஒரு சபையோ ஒரு திணைக்களமோ இந்தப் பெரிய காரியத்தைச் செய்து முடிப்பது சுலபமல்ல; ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்களைக் கொண்ட இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் ஒரே திணைக்களம் அந்த மக்களின் கலை, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாப்பதென்பதும் சுலபமல்ல. எனவே தான் பிரதேசவாரியாக கலை, கலாச்சாரத்தை வளர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுப் பிரதேச கலாமன்றங்கள் நிறுவப்பட்டன. இந்தக் கலாமன்றங்களுக்கு அரசாங்கம் நிதிஉதவியும் அளித்து வருகின்றது.

இந்தப் பிரதேச கலாமன்றங்களில் சிறப்பாக இயங்கும் கலாமன்றம் என்ற பெயரை ஒரு காலத்தில் பெற்றிருந்த பெருமை வடபிரதேச கலாமன்றத்துக்கு உரியது. இன்று செயல்படாமலிருக்கும் இக்கலாமன்றத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமெனக் கோரும் அவலநிலையில் அது இருக்கிறது. ஏன் இந்த நிலை ஏற்பட்டது? வடபிரதேசம் கலாச்சாரப் பாலைவனமாகிவிட்டதா?

கலைகள் இருக்கின்றன. கலைஞர்கள் இருக்கிறார்கள், தமக்கெனத் தனியானதொரு கலாச்சாரத்தையுடைய மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்கிறார்கள் தமது கலை கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆர்வமுள்ள மக்கள் இப்பகுதியில் வாழ்கிறார்கள். ஆனாலும் கடந்த சில வருடங்களாக வடபகுதிப் பிரதேச கலாமன்றம் இயங்காமல் தூங்கிக் கிடப்பதற்குக் காரணம் என்ன? நிதிப் பற்றாக்குறையென்று சொல்லக்கூடும். அரசாங்கமோ கலாச்சார அமைச்சோ நிதி வழங்கக்கூடிய நிலையில் இல்லையென்றாலும் கூட இதர பிரதேசமன்றங்கள் மிகச் சிறப்பாக செயற்படுகின்றன என்று சொல்ல முடியாவிட்டாலும் ஏதோ ஓரளவாவது நல்லமுறையில் இயங்கிவரும் பொழுது வடபகுதிப் பிரதேச கலாமன்றம் மட்டும் 'உயிருடனிருக்கிறது' என்ற அளவுக்காவது இயங்க முடியாதா? இங்குள்ள கலைஞர்களைக் கொண்டே கலைநிகழ்ச்சிகள் வைத்து பிரதேச கலாமன்றத்துக்கு நிதி திரட்டுவது கஷ்டமல்ல.

கடந்த காலத்தை மறந்துவிடுவோம். யாழ். இலக்கியவட்டம் கோரியிருப்பது போல இனியாவது வடபகுதிப் பிரதேச கலாமன்றத்துக்குப் புத்துயிர் அளித்து அதை ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடுத்தச் செய்ய வேண்டியது அவசியம். கலை, இலக்கியத்துக்காக தம்மையே அர்ப்பணித்துள்ளவர்களும் கலாசாரத்தை நன்கு உணர்ந்து அதைப் பேணி வளர்க்க வேண்டுமென்ற ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களும் இப்பகுதியில் பலர் உள்ளனர். அவர்களைப் பிரதேச கலாமன்றத்துக்குத் தெரிவு செய்து பொறுப்பையும் ஒப்படைத்தால் வடபகுதிப் பிரதேச கலாமன்றம் நாட்டின் இதர பிரதேச கலாமன்றங்களுக்கு வழிகாட்டக் கூடியதாக இருக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

# "கேசரிகள்" வீட்டுக் கல்யாணம்!

"வீரகேசரி" பத்திரிகை ஸ்தாபகரான பி. பி. ஆர். சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ராஜேஸ்வரிக்கு நேற்று ஆவணிப் பட்டியில் விவாகம் என்று அழைப்புக் கடிதம் ஒன்று கிடைத்தது. ராஜேஸ்வரி நடராஜன் தம்பதிகள் வாழ்க!

கடிதத்தில் "தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்" சுப. வீரகேசரி, சுப. அரசகேசரி பி. எஸ்ஸி, பிஎல், சுப. செல்வகேசரி பி. காம், பி. எல் அட்வகேட், சுப. சுந்தரகேசரி எம். ஏ. சுப. குமரகேசரி பி எஸ்ஸி, சுப. பாலகேசரி பி. ஏ. சுப. சண்முககேசரி, சுப. தியாகராஜகேசரி" என்று எல்லாம் 'கேசரி' மயமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

"வீரகேசரி" பத்திரிகையை அவர் ஆரம்பித்த சமயம் பிறந்த மூத்த மகனுக்கு அந்தப் பெயரே வைத்தார். மற்றக் குழந்தைகளுக்கும் "கேசரி" என்றே வைத்துள்ளதிலிருந்து அப்பத்திரிகை மீது அவருக்குள்ள அபிமானம் நன்கு புலப்படுகிறது.

அப்பத்திரிகையை அவர் ஆரம்பித்த நோக்கத்தை முன்னொரு சமயம் விளக்கினார். இலங்கையில் பெரிய வெள்ளமொன்று ஏற்பட்டது. கஷ்ட நிவாரணநிதிக்குப் பணம் திரட்ட முயன்றபோது சிலர் இதற்கேன் பணம் கொடுக்கவேண்டும் என்று எதிர்த்தார்களாம். அவர்களைக் கண்டிக்கவேண்டுமென்ற உணர்ச்சி மேலிட்டு பத்திரிகையை ஆரம்பிப்பதென்று முடிவுசெய்ததாகவும் ஆனால் பத்திரிகை ஆரம்பித்ததும் அவர்களைத் தாக்குவதை விட்டு ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்.

எப்படியும் அவர் கைவிசேஷம் அந்தப் பத்திரிகை பல சோதனைகளுக்கும் தப்பி பல மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ந்தோங்கி வருகின்ற

### ஐயரன் எழுதுவது

தெனின் காரணம் மலைநாட்டுத் தமிழரின் நலவுரிமைகளுக்குக் காவலனாக அது இருக்கவேண்டும் என்ற இறை அருள்தான்.

0 0 0

இலங்கைக்கு வருமாறு சென்னையில் அவர் வந்து அழைத்தபோது எனக்கு மிகவும் தயக்கமாக இருந்தது. நாடுவிட்டு நாடு, முன்பின் தெரியாத ஊர், யார் அங்கு அன்பாக இருப்பார்கள்? என்று கேட்டதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? "மேயற மாட்டுக்கு கொம்பிலா புல்லைக்கட்டி அனுப்புவர். நல்ல ஊர். எல்லாம் அங்கு போய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார்.

அவர் அனுப்பிவைத்து 32 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. என் வாழ்விலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. என்றாலும் எல்லாம் நன்மைக்கே என்பதை உணர்கின்றேன். செட்டியார் அவர்களை நினைக்கும்போதெல்லாம் என் நெஞ்சில் நன்றி உணர்ச்சிதான் ஏற்படுகிறது. இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைச் சரித்திரம் எழுதுகையில் அவரது பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

0 0 0

செல்வச்சந்நிதித் திருவிழாவுக்கு ஒரன்பர் அழைத்துச் சென்றார். மக்கள் ஏராளமாகக் கூடிப் பயபக்தியுடன் வழிபட்டார்கள். கோவிலுக்கு மின்சக்தியும் தண்ணீர் சடலையும் செய்யும் ஒரு புண்ணியவானிடம் அன்பர் அழைத்துச்சென்று, உதிரிப் பாகங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு மின்சக்தி தடைப்பட்டதுண்டா? என்று கேட்டதற்கு உதிரிப் பாகங்கள் கைவசம் வந்த பின்தான் மிஷினில் ஏதாவது கோளாறு ஏற்படும் என்றும் எல்லாம் முருகன் செயலென்றும் மிக அடக்கமாகச் சொன்னார்.

எங்கும் அன்னதானங்கள் நடைபெற்றன. காவடிகளுக்குக் கணக்கில்லை. இவ்வளவு பக்தியும் அறங்களும் ஓங்க ஓங்க யாழ்ப்பாணத்துக்கு என்ன குறை? முருகன் அருள் பூரணமாக இருப்பதை அங்கு கண்டேன்.

நல்லை

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

பிற்பகல் 5-30-மணி: அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள் பாட்டு. பிற்பகல் 5-45 மணி: செல்வி கிருஷ்ண வேணி மயில்வாகனம் பாட்டு செல்வி சோமனா சுந்தையா வயலின்- திரு பொன் சுகானந்தா-மிருதங்கம், மாலை 6-15 மணி: செல்வி புஷ்ப காந்தி இராசையா -பாட்டு- பிரம்மஸ்ரீ எஸ் வெங்கடேஸ்வர சர்மா-வயலின்: திரு சின்னராசா மிருதங்கம்.

இரவு 7-30 மணி: திரு என் அரியநாயகம்-புல்லாங்குழல் பிரம்மஸ்ரீ எஸ் சர்வேஸ்வர சர்மா-வயலின் திரு எம். என் செல்லத்துரை-மிருதங்கம், இரவு 9 மணி தொடக்கம் 10 மணி வரை திரு ஏ. ஜி. அய்யாக்கண்ணுதேசிகர் பாட்டு - பிரம்மஸ்ரீ எஸ். சோமாஸ்கந்த சர்மா - வயலின்- திரு. ஏ. என் இராமநாதன்- மிருதங்கம்.

## நாளை தீர்த்தம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தீர்த்தத் திருவிழா நாளை நடைபெறுகிறது. நாளை உற்சவத்தில் திரு. க. இராசசேகரனின் பண்ணிசையும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை சங்காபிஷேகம் தண்டிகை உற்சவம் என்பனவற்றுடன் உற்சவம் முடிவடையும். இன்றுமாலை செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை 'இறைவழிபாடு' பற்றி உரையாற்றுவார்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## காக்காகடையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றும் திரு. விக்னராஜா சொன்னார் "காக்காவைக் கொலை செய்வதற்குத் தவராஜா திட்டமிடுவதாகவும் அந்தக் குற்றத்தை என்மீது சுமத்த அவர் முயலுவதாகவும் நான் சிறிதரனிடமும், திருஞானத்திடமும் தெரிவித்தேன். நான் பயப்படுகிறேனென்றும் அவர்களிடம் சொன்னேன். என்னைப் பயப்படவேண்டாமென்று அவர்கள் சொன்னார்கள். காலஞ்சென்ற கடை முதலாளியை எனக்கு நன்கு தெரியும். நான் அவரிடம் நகைகள் வாங்குவதுண்டு. கரவெட்டியில் எனக்கு ஒரு கடை இருக்கிறது. இச்சம்பவத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்பு நான் மாலை ஆறரை மணிப் படக்காட்சியைப் பார்த்துவிட்டுத் திரும்பினேன். பஸ் கிடைக்காததால் நான் நடந்து வந்துகொண்டிருந்தேன் காலஞ்சென்றவர் என்னைக் கூப்பிட்டுக் கடையில் தங்கி இருந்துவிட்டு மறுநாட் காலை செல்லும்படி கூறினார் எனவே நான் அன்றிரவு அங்கே தங்கியிருந்தேன். மறு நாள் நான் பஸ்ஸுக்குப் புறப்பட்டுச் சென்றேன்" என்றும் முதலாம் எதிரி தமது ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக நீதவான் திரு. விக்னராஜா தமது சாட்சியத்தில் தெரிவித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்ட முழு விபரங்களையும் அவர் தெரிவித்தார்.

## இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உருத்திரபுரம் சிவாலயத்தில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதையொட்டி விசேஷ அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடைபெறும்.

இன்று

## காடுவெட்டும் சிரமதானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சியைச் சேர்ந்த ஸ்கந்தபுரம் குடியேற்றத் திட்டத்தில் முருகன் ஆலயமொன்று அமைப்பதற்காக இன்று காடுவெட்டும் திருப்பணி ஆரம்பமாகிறது. இதற்கென மூன்று ஏக்கர் நிலம் சிரமதானமூலம் காடுவெட்டித் துப்புரவாக்கப்படும். கிளிநொச்சிமாவட்டக்காணி அதிகாரி திரு ஏ. வி. வேலுப்பிள்ளை தலைமையில் இன்று காலை காடுவெட்டும் சிரமதானப்பணி ஆரம்பமாகும் இதற்கான ஏற்பாடுகளை ஸ்கந்தபுரம் குடியேற்ற உத்தியோகஸ்தர் திரு க. நமநாதன் ஒழுங்குசெய்துள்ளார்.

## 'பாகுபாடுகளை அகற்றும் கருவி'

யாழ்ப்பாணம்.

செல்வம், வாக்கு, காயம் ஆகியனவற்றைப் பரிசுத்தமாகத் திகழச்செய்யும் அருங்கலையாக இசை விளங்குகிறது. மதம், நிறம், பாஷை என்ற பாகுபாட்டை அகற்றும்கருவியாகவுமது திகழ்கிறதென்று நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 12-வது ஆண்டு நிறைவுவிழா மூன்றும்நாள் நிகழ்ச்சியின்போது பேசுகையில் யாழ். மாநகர உதவிமேயர் திரு ஆ. துரைராஜசிங்கம் கூறினார்.

திரு. துரைராஜசிங்கம் மேலும் பேசுகையில் இசை மூலமாக அரிய காரியங்களைச் சாதித்துள்ள முன்னோர்களை நாம் இந்த வேளையிலே நினைவுகூரவேண்டும் என்றும் ஒழுக்கமுள்ளவர்களாகவும், ஆசாரசீலர்களாகவும் பக்தியோடு கூடிய பண்பாளர்களாகவும் வாழ்ந்துகாட்டிய அவர்களின் வழியை நாமும் பின்பற்றவேண்டும்என்றார்.

# வல்லிபுரஆலய உற்சவம் இம்முறையும் நடக்காது?

## தர்மகர்த்தா ஒருவர் கூறுகிறார்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் இவ்வாண்டும் நடைபெறக் கூடியதாயில்லை என தர்மகர்த்தாக்களில் ஒருவர் தெரிவித்தார். இந்த மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறவிருந்த இவ்வுற்சவம் நடைபெறாதெனத் தெரிகிறது. கடைசி தினத்தில் நடக்கவிருக்கும் கடல் தீர்த்தம் மட்டும் நடக்கலாமென அறியக்கிடக்கிறது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் இது விடயமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. இக்கோவிலிலுள்ள விக்கிரகங்களுக்கு சாற்றியிருந்த மருந்துகள் கழுவுபட்டதால் விக்கிரக அசைவு ஏற்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக கொடியேற்ற முடியாதென்றும் வெளியிடப்பட்ட கருத்தை அவர்கள் ஏற்கவில்லை.